DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 273/2024** |
| Deposition of Witness for | : PW 8 |
| Name | : திருமதி.முத்துலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 13.03.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 13th March2026.

1,4 **எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை, மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது தென்காசி மாவட்ட தனிப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.04.2018 ம் தேதி சங்கரன்கோவில் தாலுகா காவல்நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது மதியம் 1.30 மணிக்கு பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலையகுற்ற எண்.71/2018 ச/பி. 454, 380 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதன் அசல் மற்றும் புகார் மனுவை சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அதன் ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்பந்தாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவமானது 17.04.2018 ம் தேதி 9.00 மணிக்கு நடைபெற்றதாக முதல் தகவல் அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்கும். முதல் தகவல் அறிக்கையில் சம்பவம் பற்றிய தகவல் காவல்நிலையத்திற்கு 18.04.2018ம் தேதி 1.30 மணிக்கு கிடைக்கபெற்றதாக துலங்குமா என்றால் துலங்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தினத்திலிருந்து ஒரு நாள் கழித்து சம்பவம் தொடர்பாக தகவல் கிடைத்ததாக முதல் தகவல் அறிக்கையில் துலங்குமா என்றால் துலங்கும். முதல் தகவல் அறிக்கையில் காலதாமதமாக தகவல் கொடுக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் துலங்காது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட தினமான 18.04.2018 அன்றே அதன் அசலை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேனா என்றாலும், அன்றைய தினமே விசாரணை அதிகாரியிடம் அதன் ஒரு நகலை சமர்ப்பித்தேனா என்றால் சமர்ப்பித்தேன். 18.04.2018 அன்றே காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றால் சரிதான். அன்றைய தினத்தில் அவரது விசாரணையின்போது நான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்தில் 18.04.2018 அன்று சமர்ப்பித்ததை குறித்து வாக்குமூலம் கொடுததுள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். அந்த முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனு 19.04.2018 அன்று நீதிமன்றத்தில் கிடைக்கப்பெற்றதாக துலங்குமா என்றால் துலங்கும். இவ்வழக்கின் சம்பவம தொடர்பாக 18.04.2018ம் தேதி புகார் மனு கிடைக்கப்பெறுவதற்கு முன்பாக வேறு எந்த தகவலும் காவல்நிலையத்தில் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் காணாமல் போனதாக தெரிவித்துள்ள 49–1/2 பவுன் நகைக்கான ஆவணம் எதையும் புகார்தாரர் புகார் மனுவுடன் சேர்த்து என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. 17.04.2018ம் தேதி இரவு 7 மணியளவில் இவ்வழக்கின் சம்பவம் தொடர்பாக புகார் மனு எதுவும் எங்கள் காவல்நிலையத்தில் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் முதல்விசாரணையில் கூறிய நாள் மற்றும் நேரத்தில் புகார் மனு எதுவும் கிடைக்கப் பெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கு எதிராக முறையாக விசாரணை செய்யாமல் பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 18.04.2018 ம் தேதி புகார்தாரர் புகார் மனு கொடுக்க வரும்போது அவருடன் வேறு யாரேனும் வந்தார்களா என்றால் இல்லை.

1,3,4 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி 2ம் எதிரி தரப்பில் எடுக்கப்பட்ட குறுக்குவிசாரணையை அடாப்ட் செய்துகொள்வதாக தெரிவித்தார்.

மறுவிசாரணை இல்லை.